மாலை முரசு

பக்கங்கள் 11

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆடி 24 புதன்கிழமை 09.08.2023 அதிர்வு 09


## இராஜாங்கனை விபத்தில் இளம் தம்பதியினர் மரணம்

அநுராதபுரம் – இராஜாங்கனைப் பிரதேசத்தில் இன்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளம் தம்பதியினர் உயிரிழந்துள்ளனர். 04

# '13' குறித்து மனம் திறந்த விவாதத்துக்கு ஜனாதிபதி அழைப்பு!

## நாடாளுமன்றத்தில் அவர் விசேட உரை



**கொழும்பு,ஒகஸ்ட்09**

**நாட்டின் வளர்ச்சிக்கும் எதிர்காலத்திற்கும் ஏற்ற வகையில் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.** 04

## சம்பந்தனை நேரில் சென்று சந்தித்தார் கிழக்கு ஆளுநர்



கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் குறித்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுடன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துரையாடியுள்ளார். 04

## கொழும்பு மேயரின் இல்ல மின் விநியோகம் துண்டிப்பு



நான்கு மாதங்களாக மின்சாரக் கட்டணம் செலுத்தப்படாததால், கொழும்பு முன்னாள் மேயர் ரோசி சேனாநாயக்கவின் 04

## வட,கிழக்கு சிங்களவர் குறித்து ஜனாதிபதிக்கு அக்கறையில்லை

### விமல் வீரவன்ஸ நாடாளுமன்றில் காட்டம்



வடக்கு – கிழக்கிலுள்ள சிங்கள மக்களின் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதிக்கு அக்கறையில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். 04

## யாழ். மீனவர் மூவர் வேதாரண்யத்தில் கரை ஒதுங்கினர்



இலங்கை கடற்தொழிலாளர்கள் மூன்று பேர் படகு பழுதடைந்ததால் தமிழ்நாட்டில் கரையொதுங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் – எழுவைதீவில் இருந்து கடந்த 6ஆம் திகதி காலை 04


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA

- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES 20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS

KELSEY HOMES 40 Years Housing Excellence

S.Thumilan Group Chairman ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRAL PARK 15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04. Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna. Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539



# கொழும்பு நோக்கி பயணித்த ரயில் விபத்து!





பொல்கஹவெலயில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயில் மீரிகம வில்வத்த பகுதியில் கனரக வாகனமொன்றுடன் மோதி பாரிய விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் இன்று (09) காலை இடம்பெற்றுள்ளது.

ரயிலில் மோதிய கொள்கலன் பெட்டி சுமார் 100 மீற்றர் தூரம் இழுத்துச் செல்லப்பட்டு நிறுத்தப்பட்டதால் ரயில் சமிக்ஞை, மின்கம்பங்கள் மற்றும் ரயில் கதவுகள் என்பன பலத்த சேதம் அடைந்துள்ளன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்தால், ரயில் சில்லுகள் மற்றும் என்ஜின் பலத்த சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகப் பிரதான பாதையில் ரயில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.







# தபால்சேவை பெற்றுக் கொள்வதில் தாண்டியடிக் கிராம மக்கள் சிரமம்

## நடவடிக்கை எடுக்குமாறு கேட்கின்றனர்



(வடிவேல் டினேஸ்)

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேச சபைக்குட்பட்ட தாண்டியடி கிராம மக்கள் தங்களது தபால் சேவையைப் பெற்றுக் கொள்ள சுமார் 12 கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளது என்று விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதிகளில் உப தபாலக வசதி இன்மையே இதற்குக் காரணம் என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

1995 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் இடம்பெற்ற காலத்தில் இருந்து இன்று வரை தபால் சேவையை பூர்த்தி செய்ய அலைந்து திரிய வேண்டியுள்ளது என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

1995 ஆம் ஆண்டு புனர்வாழ்வு அமைச்சால் தாண்டியடி பிரதேச மக்களுக்கு உப-தபாலகக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டிருந்தது.

தபால் சேவைக்கான முன்னாயத் தங்கள் இடம்பெற்ற போது இராணு வத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இந்தக் கட்டடம் சென்றமையால் உப-தபால கம் திறக்க முடியாமல் போனது என்று கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யுத்தம் முடிவுற்றதன் பின்னர் குறித்த கட்டடம் இராணுவத்தினரின் பிடியில் இருந்து முழுமையாக விடுவிக்கப் படுள்ளது.

இதன் பின்னர் பிரதேச மக்க ளால் பலதரப்பட்ட தரப்பினரிடம் இது குறித்து தெரிவித்தும் இது தொடர்பில் எதுவித நடவடிக்கைகளும் இன்றுவரை எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

சம்மந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும் மக்கள் மக்களின் கோரிக்கை விடுத் துள்ளனர். கிழக்கு மாகாண ஆளுநரும் இது தொடர்பில் கவனமெடுக்க வேண்டும் என்று தாண்டியடி கிராம் அபிவிருத்தி சங்க செயலாளர் கோரிக்கை விடுத்–துள்ளனர்.




# எம்பிலிப்பிட்டிய விபத்தில் ஓட்டோ சாரதி உயிரிழப்பு

எம்பிலிப்பிட்டிய, மித்தெனிய வீதி யில் கும்பகோதர பிரதேசத்தில் இலங் கைப் போக்குவரத்துச் சபைக்கு சொந்த மான பஸ்ஸும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதிய விபத்தில், ஓட்டோ சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் ஓட்டோவில் வந்த மூவர் காயமடைந்துள்ளனர். அவர்கள் எம்பிலிபிட்டிய மாவட்ட பொது வைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின் றனர் என்று எம்பிலிப்பிட்டிய பொலி ஸார் தெரிவித்தனர்.

ஓட்டோவின் சாரதியான கட்டுவன, புரந்தயா பகுதியைச் சேர்ந்த ஜி.ஏ.ரஞ் சித் (வயது 50) என்ற நபரே உயிரி ழந்துள்ளார்.

பஸ்ஸின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன் றத்தில் முன்னிலைப்படுத்தப்பட உள்ளார். எம்பிலிபிட்டிய பொலிஸ் போக்குவரத்துப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பெண் தலைமை குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கும் திட்டம்

(எஸ். சினீஸ் கான்)

பல வருடங்களாக சமூக சேவை செய்துவரும் நாபீர் பவுண்டேஷனின் செயற்றிட்டத்தின் கீழ் வருமானம் குறைந்த மற்றும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உணவு பொருள்கள் வழங்கும் திட்டம் தொடர்ச்சி யாக நடைபெற்று வருகின்றது.

இந்த வேலைத் திட்டத்தின் எட்டாவது கட்டம் சம்மாந்துறை பிரதேசத்துக்கு உற்பட்ட வீரமுனை பிரிவில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

நாபீர் பவுண்டேஷன் ஸ்தாபகரும் பொறியியலாளருமான உதுமான் கண்டு நாபீரின் வழிகாட்டலின் கீழ் நடை பெற்ற இந்த நிகழ்வு நாபீர் பவுண்டேஷ னின் சம்மாந்துறை வீரமுனை தலைவர் கோவிந்தசாமி தலைமையில் நடை பெற்றது. நிகழ்வில் பொறியியலாளர் உதுமான் கண்டு நாபீரின் பாரியார் ஆ.டு.சனாஸியா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு உணவுப் பொதிகளை வழங்கினார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**‘13’ குறித்து ...**

இதனை அடைவதற்கு திறந்த மனதுடன் விரிவான கலந்துரையாடல்களை நடத்தி, நாடாளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களிடையே ஒருமித்த கருத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று தாம் ஆற்றிய விசேட உரையிலேயே அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:-

13 ஆவது திருத்தத்தில் உள்ள குறைபாடுகளை நாங்கள் பார்க்க வேண்டும். ஏனைய நாடுகளின் அதிகாரப் பகிர்வை நாங்கள் ஆராய வேண்டும்.

நாடாளுமன்றத்தில் எனது கட்சிக்கு மூன்று உறுப்பினர்களே உள்ளனர். ஆகவே 13 ஆவது திருத்தத்தை முன்னோக்கிக்கொண்டு செல்வதானால் அதற்கு அனைத்துக் கட்சிகளின் ஆதரவும் அவசியம்.

வருடாந்தம் மாகாண சபைகளுக்கு ஐம்பது கோடி ரூபா செலவிடப்படுகின்றது. அதனால் நன்மைகள் இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். ஆனாலும் 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தைப் புறந்தள்ள முடியாது.

எனவே அது தொடர்பான எனது யோசனைகளை நான் முன்வைத்துள்ளேன். நாடாளுமன்றம் அதனை ஆராய்ந்து தீர்மானமொன்றை எடுக்க வேண்டும்.

மாகாண சபைகள் ஊடாக மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். எனவே அரசமைப்பைத் திருத்தம் செய்து மக்களுக்கு ஏற்ற வகையில் தீர்மானமொன்றை எடுத்தல் அவசியம்.

மாகாண சபை முறைமையை அரசமைப்பிலிருந்து நீக்கிவிடக் கூடாதென்பது ஏகமானதான கருத்தாக இருக்கின்றது.

இது வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுமல்ல, நாட்டின் அனைத்து மாகாணங்களுக்கும் பொதுவானது. மக்களுக்குத் தேவைப்படும் வகையில் இதனை மாற்றியமைக்க வேண்டியதாக இருக்கின்றது. மாகாண சபை சட்டத்திலும் திருத்தங்களைச் செய்ய வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை இதன் பின்னர் நடத்த வேண்டும். இதர அதிகாரங்கள் குறித்து முதலில் பேசி பின்னர் பொலிஸ் அதிகாரங்கள் குறித்து பேசுவோம். இலகுவான விடயங்களை முதலில் ஆராய்ந்து பின்னர் கடினமான விடயங்களை ஆராய்வோம்.

அரசாங்கம் எடுக்கும் ஒவ்வொரு முடிவையும் எதிர்ப்பது என்ற பாரம்பரிய நடைமுறையில் இருந்து எதிர்க்கட்சிகள் விலகிச் செல்ல வேண்டும் என்று கோருகின்றேன்.

முடிவெடுப்பதில் எதிர்க்கட்சிகளைக் கருத்தில் கொண்டு, சமத்துவமானதும், ஒத்துழைப்புடனானதுமான அரசியல் சூழலை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நம்பகத்தன்மையுடனும், பொறுப்புடனும் பணியாற்றுவது முக்கியமானது.

இந்தப் புதிய அணுகுமுறையை ஏற்றுக்கொள்வதை ஊக்குவிக்கும் புதிய பயணத்திற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளிலேயே நாட்டின் அபிவிருத்தி தங்கியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், தங்களின் தனிப்பட்ட வாத, விவாதங்களை தவிர்த்து, நாட்டின் எதிர்காலம் குறித்து கவனம் செலுத்த வேண்டுகிறேன்.

நாட்டின் நீண்ட கால நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கும் முடிவுகளை கூட்டாக எடுக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் நேர்மையான ஒற்றுமை தேவை. - என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

---

**கொழும்பு மேயரின் ...**

துண்டிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி முதல் இதுவரையில் 6 லட்சம் ரூபா மின்சாரக் கட்டணம் செலுத்தப்படவில்லை என மின்சார சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி நேற்றுகாலை மேயர் அலுவலகத்திற்கு சென்ற மின்சார சபை அதிகாரிகள் குழு மின்சாரத்தைத் துண்டித்தது.

அவர் பதவியில் இல்லாத போதும் மேயர் இல்லத்தில் தங்கியிருந்தமையினால் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக மாநகர சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நேற்று (ஆகஸ்ட் 8) காலை தெஹிவளை - கல்கிஸ்ஸ மாநகர சபைக்கான மின்சாரமும் துண்டிக்கப்பட்டது.

ஜுன் மாதம் தொடர்பான கட்டணப் பட்டியல் உரிய நேரத்தில் கிடைக்காததால் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மின்சார சபை மின்னஞ்சல்கள் மூலம் கட்டணப் பட்டியல்களை அனுப்புவதாகவும், தவறான மின்னஞ்சல் முகவரியினால் உரிய நேரத்தில் பில் கிடைக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார் .

இது தொடர்பாக இலங்கை மின்சார சபையிடம் தனது அதிகாரிகள் பேச்சு நடத்தி அதனைச் செலுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யத் திட்டமிட்டுள்ளனர் என்வும் ஆணையாளர் தெரிவித்துள்ளார் .

இந்நிலையில் தெஹிவளை - கல்கிஸ்ஸ மாநகர சபைக்கான மின்சாரம் ஒரு மணி நேரத்தில் மீண்டும் வழங்கப்பட்டது.

---

**இராஜாங்கனை ...**

இவர்கள் பயணித்த ஹயஸ் வாகனம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியில் அருகில் இருந்த மரத்துடன் மோதியுள்ளது.

இதன்போது ஹயஸ் வாகனத்தைச் செலுத்திச் சென்ற 28 வயதுடைய கணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

படுகாயங்களுடன் அம்புலன்ஸில் இராஜாங்கனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட 26 வயதுடைய மனைவி இடைவழியில் உயிரிழந்துள்ளார்.

இருவரினதும் சடலங்களும் இராஜாங்கனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்தன.

விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்த இளம் தம்பதியினர் அநுராதபுரம் - பலுகஸ்வெவை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

---

**வட, கிழக்கு ...**

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

“வடக்கு- கிழக்கு மாகாணங்களின் உள்ள தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக தமிழ் மக்கள் பிரதிநிதிகளுடன் பேசுகிறார்

- என ஜனாதிபதி கூறினார்.

முஸ்லிம்களின் பிரச்சினைகள் தொடர்பாக முஸ்லிம் பிரதிநிதிகளுடன் பேசுகிறார் எனக் கூறினார்.

ஆனால், அந்த மாகாணங்களில் வாழும் சிங்கள மக்களின் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதிக்கு தெரியவில்லையா? யாழ். திஸ்ஸ விகாரையில் சமயக்கிரியைகளில் ஈடுபடமுடியாத நிலைமை ஏற்பட்டது.

குறுந்துர்மலையில் பிரச்சினை உள்ளது. வடக்கு - கிழக்கில் சிறுபான்மையாக வாழும் சிங்கள மக்கள் எவ்வளவு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள் தெரியுமா? எனவே, ஒரு தரப்பினரின் பிரச்சினைகளை மட்டும் பார்க்காமல், அனைத்து இன மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஜனாதிபதி மக்கள் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்த வேண்டும்” என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

**சம்பந்தனை நேரில் ...**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பந்தனையின்று புதன்கிழமை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மரியாதை நிமித்தம் சந்தித்து, கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

---

**யாழ். மீனவர்கள் ...**

9 மணிக்கு பைபர் படகில் மீன்பிடிக்க சென்ற மூன்று கடற்தொழிலாளர்களும் மதியம் 2 மணியளவில் இயந்திரம் பழுதடைந்ததால் நாகை மாவட்டம் வேதாரண்யம் பகுதியில் கரையொதுங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டம் ஆனைக்கோட்டை, குருநகர் மற்றும் வல்வட்டித்துறை பகுதிகளை சேர்ந்த கடற்தொழிலாளர்களே இவ்வாறு இந்தியா சென்றடைந்துள்ளனர்..

தமிழக காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வீட்டு உரிமைப் பத்திரங்கள் வழங்கல்



பொரளை சஹஸ்புர மற்றும் அநுராதபுரம் துருஇதுருகம வீடமைப்புத் திட்டங்களில் பயனாளிகளுக்கு உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. இதன் கீழ் பயனாளிகளுக்கான 24 உரிமைப் பத்திரங்கள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே தலைமையில் நேற்று (08) பத்தரமுல்ல செத்சிறிபாயவிலுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைவாக நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டங்களில் வசிப்பவர்களுக்கு உரிமைப்பத்திரம் வழங்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

பொரளை சஹஸ்புர வீடமைப்புத் திட்டத்தின் பயனாளிகள் 23 பேருக்கும் அனுராதபுரம் துருஇதுருகம வீடமைப்புத் திட்டத்தின் பயனாளி ஒருவருக்கும் உரிமைப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. மற்ற பயனாளிகளுக்கு உறுதிப் பத்திரங்கள் வழங்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நகர குடியேற்ற அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.



# அம்பாறை மாவட்டத்தில் எய்ட்ஸ் தடுப்புக் குழுக்கூட்டம்


(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ்'ன் ஏற்பாட்டில் கல்முனை பிராந்திய பாலியல் நோய்கள் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.என்.எம். தில்ஸானால் அம்பாறை மாவட்ட எய்ட்ஸ் கமிட்டி கூட்டம் கல்முனை பிராந்தி சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ அப்துல் வாஜித் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கல்முனைப் பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம் சீ எம். மாஹீர் , பாலியல் நோய்களுக்கான விசேட வைத்திய நிபுணர்வு பியூமி பெரேரா, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பொலிஸார் உட்பல பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# இந்தியத் திரைப்படக் கலைஞர் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம்!



(பழுவூரான்)

திரைப்படத் தயாரிப்பாளரும், சென்னை டிஸ்கவரி பப்ளிகேசன் நிறுவனருமான மு.வேடியப்பன் மற்றும் ஆனந்த விகடனின் புகைப்பட கலைஞர் பொன்.காசிராஜன் ஆகியோர் செவ்வாய்க்கிழமை (08) கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துக்கு வருகை தந்திருந்தனர்.

இதன்போது கிழக்கு மாகாண எழுத்தாளர்களின் ஆக்கங்களை நூலுருவாக்கம் செய்தல் மற்றும் தொகுப்புக்களை வெளியிடுதல் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 'கிழக்கின் நூறு சிறுகதைகள்' தொகுப்பு நூல இருவருக்கும் கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதனால் வழங்கி வைக்கப்பட்டது.

# சதுரங்க போட்டியில் தேசிய மட்டத்துக்குத் தெரிவு

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்க போட்டியில் ஆண்களுக்கான அனைத்து வயது பிரிவுகளிலும் கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது ஸாஹிரா தேசிய பாடசாலை மீண்டும் சாதனை படைத்துள்ளது.


திருகோணமலை சிங்கள மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கிழக்கு மாகாண மட்ட சதுரங்க போட்டியில் ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவர்கள் 17 வயதுக்கு உட்பட்ட பிரிவிலும் 20 வயதுக்கு உட்பட்ட பிரிவிலும் முதலாம் இடங்களைப் பெற்று சம்பியனாக தெரிவு



செய்யப்பட்டனர். தேசிய மட்ட போட்டிக்கும் தெரிவாகியுள்ளனர்.

20 வயது பிரிவில் ஐ.எம்.சயான் ஷாஹி, எம்.என்.ஷஹீன் அஹமட், எம்.ஏ.தமீம், எம்.ஏ.ஏ..அதீப், எம்.ஏ.ஏ.அம்பர், எம். கே.ஏ.எஸ்.அனாப், ஏ.எம்.சப்கி ஆகியோரும், 17 வயது பிரிவில் ஐ.எம். சம்லி ஷாஹி, ஏ.எஸ்.ஏ.மிஜ்வாத், எம்.என். எம்..றீமாஸ், ஐ.கே.எம்.ஆகில் கான், எம். இஸட்.எம். சனீப், எம்.ஜே.ஐ..ஹஸ்மி ஆகியோரும் போட்டியில் கலந்து கொண்டனர்.

சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கும், அவர்களை பயிற்றுவித்து போட்டிக்கு அழைத்துச் சென்ற பொறுப்பாசிரியர்கள் எம்.வை.எம்.றகீப், எச்.எம்.ஜெமீன், பயிற்றுவிப்பாளர் எஸ். எல்.எம். சுஹ்தான் மற்றும் ஏ.எம்.சாகீர் ஆகியோரைக் கல்லூரி அதிபர். எம்.ஐ.ஜாபிர் பாராட்டியுள்ளார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சமஷ்டிக் கோரிக்கையின் நியாயம்

நடந்து முடிந்து, முடிவும் கிட்டிய ஆட்டத்தை மீண்டும் முதலிலிருந்து - ஆரம்பத்திலிருந்து - விளையாடுவதற்குத் திரும்பவும் களத்தில் விசில் ஊதியிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

35 ஆண்டுகளுக்கு முன்னர் அரசமைப்பில் திருத்தமாகக் கொண்டுவரப்பட்டு, சட்டப்படியும் உயர்நீதிமன்ற அனுமதி மற்றும் அங்கீகாரப்படியும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டு, அரசமைப்புச் சட்டமாக விளங்கும் ஓர் ஏற்பாட்டை - 13 ஆவது திருத்தத்தை - மீண்டும் நாடாளுமன்ற விவாதத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றமை, ஏற்கனவே விளையாடி முடிந்து முடிவும் கிட்டிய ஆட்டத்தைத் திரும்பவும் முதலிலிருந்து ஆடுவதற்கு ஒப்பானதாகும்.

இதில் - இந்த நடவடிக்கையில் - தமிழர்களுக்கு உடன்பாடு இல்லை. அதற்குக் காரணம் உண்டு. ஏற்கனவே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னரும் இந்த 13 ஆவது திருத்தம் 35 ஆண்டுகளாக முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவே இல்லை. இது ஒரு வகையில் 'அளாப்பல்' ஆட்டம்தான். அத்தகைய அளாப்பல் ஆட்டத்தால் ஏற்கனவே பாதிக்கப்பட்ட தமிழர்கள், நியாயம் இல்லாத அந்த அளாப்பல் ஆட்டத்தை மீண்டும் விளையாடுவதில் - அதற்காகக் களமிறங்குவதில் - உடன்பாடு கொண்டிருக்கவில்லை.

ஆனால், விடயம் நாடாளுமன்ற விளையாட்டுக் களத்துக்குத் திரும்பவும் வந்திருக்கின்றது. பெரும்பான்மை எண்ணிக்கை என்ற ஜனநாயகக் கேலிக் கூத்தின் - நியாயத்தின் - அடிப்படையில் இந்த அளாப்பல் ஆட்ட முறைமை மீண்டும் நாடாளுமன்ற மைதானத்துக்கு வந்திருக்கின்றது. அதை எதிர்கொண்டு விளையாடுவதைத் தவிர தமிழர்களுக்கு வேறு மாற்று வழி இல்லை.

நிறைவேற்றப்பட்ட அரசமைப்பு திருத்தம் 35 ஆண்டுகளாக நடைமுறையாக்கத்துக்கு மறுக்கப்பட்டு, பரணில் தூக்கிப் போடப்பட்ட நிலையில், மீண்டும் அடுத்த 'ரவுண்ட்' பரிசீலனைக்காகத் திரும்ப நாடாளுமன்றக் களத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் எடுத்து வரப்படுவது, ஏற்கனவே தமிழர் தரப்பினால் ஒற்றுமையாக முன்வைக்கப்படும் ஒரு கோரிக்கையை வலியுறுத்தி நிற்பதும் அவதானிக்கத்தக்கது.

தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஆகக் குறைந்த எந்தத் தீர்வும் சமஷ்டி அடிப்படையில்தான் அமைய வேண்டும் என்று தமிழர் தரப்பு ஒன்றுபட்டு வலியுறுத்தி நிற்கின்றது. வழங்கப்பட்ட - பகிரப்பட்ட - அதிகாரங்கள், தரப்புகளின் அனுமதியும் இணக்கமும் இன்றி மீளப் பெறப்பட முடியாதவை என்பதை உறுதிப்படுத்துவதே சமஷ்டி முறைமையாகும்.

நிறைவேற்றப்பட்டு, சட்டமுமாகி, 35 வருடங்கள் நடைமுறைப்படுத்தப்படாத 13 ஆவது திருத்தம் மீள்பரிசீலனைக்கு உள்ளாகி, சட்டரீதியாக வெட்டப்படும் சூழல் உருவாகி இருக்கின்றமை மீளப் பறிக்க முடியாத அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்தும் சமஷ்டிக் கோரிக்கையே சரியான தீர்வு என்பதை நியாயப்படுத்தி நிற்கின்றதல்லவா?

## கிழக்கில் ஆசிரியர்களின் வாண்மையை அபிவிருத்தி செய்ய உலக வங்கி உதவி

### மாகாண கல்வி பணிப்பாளர் அகிலா மூன்று வலயங்களுக்கும் விஜயம்





**( வி.ரி. சகாதேவராஜா)**

கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்காக உலக வங்கி உதவியுடன் திட்டம் ஒன்று அமல்படுத்தப்பட்டு வருகிறது.

பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை அறிவிருத்தி திட்டம் என்ற மகுடத்தின் கீழ் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

முன்னோடியாக மூதூர் பட்டிருப்பு சம்மாந்துறை ஆகிய மூன்று வலயங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் முன்னேற்ற அறிக்கைதொடர்பாகநேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மூன்று வலயங்களுக்கும் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம், மேலதிக மாகாண கல்வி பணிப்பாளர் எம்.எம். ஜவாத், பிரதி கல்விப் பணிப்பாளர் ஆர்.நிமலரஞ்சன் ஆகியோர் விஜயம் செய்து அதிபர் மற்றும் கல்வி சார் அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

பாடசாலைகளுக்கு இந்த் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 15 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. ஏனைய வகை பாடசாலைகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆசிரியர் ஓய்வறை என்பது இனிமேல் ஆசிரியர் அபிவிருத்தி பிரிவு என்று மாற்றப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

மீண்டும் எதிர்வரும் 18 ஆம் திகதி பட்டிருப்பு வலயத்துக்கும் 19 ஆம் திகதி சம்மாந்துறை வலயத்துக்கும் இறுதிக்கட்ட மதிப்பீட்டுக்காகச் செல்லவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அம்பாறை நுகர்வோர் அதிகார சபை பாய்ச்சல்: பழுதடைந்த 84 ஆயிரம் கிலோ மல்லிக்கு சீல்!

**(பாறுக் ஷிஹான்)**

மனித பாவனைக்கு உதவாத மல்லியை பதுக்கி வைத்திருந்த வர்த்தக களஞ்சியசாலை மீது அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையினர் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர்.

பொது மக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்குஅமையஅம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி சாலிந்த பண்டார நவரத்ன வழிகாட்டலில் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் புலன் விசாரணை அதிகாரிகள் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.



நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி மனித பாவனைக்கு உதவாத பழுதடைந்த 84 ஆயிரத்து 875 கிலோ மல்லி மற்றும் 300 கிலோ நிறச்சாயம் என்பன பதுக்கி வைதகப்பட்டிருந்த களஞ்சிய சாலையே இவ்வாறு முற்றுகையிடப்பட்டது.

செவ்வாய்க்கிழமை(08) மாலை நடந்த திடீர் சுற்றிவளைப்பின் போதே இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

களஞ்சியசாலை சீல் வைக்கப்பட்டுள்ளது. சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருமலை, காங்கேசன், பலாலியை இந்தியாவுக்கு வழங்க முயற்சியா?

## தயாசிறி ஜெயசேகரா நாடாளுமன்றத்தில் கேள்வி












திருகோணமலை, காங்கேசன்துறை, பலாலி விமான நிலையம் ஆகியவற்றை இந்தியாவுக்கு வழங்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தெரிவித்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் நாடாளுமன்ற விவாதம் ஒன்று வேண்டும் என வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

“இந்தியாவுக்கு அண்மையில் விஜயம் செய்த அதிபர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுடன் பல ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளார். ஜனாதிபதி இந்திய விஜயத்தை தொடர்ந்து திருகோணமலை, காங்கேசன்துறை, பலாலி விமான நிலையம் ஆகியனவற்றை இந்தியாவுக்கு வழங்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நாடாளுமன்றத்தில் உள்ள தெரிவுக் குழுக்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் எவரும் உள்ளடங்கப்படாமையால் இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுக் கூட்டத்தில் கேள்வி எழுப்ப எமக்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் தொடர்பில் நாடாளுமன்றவிவாதம்ஒன்றுவேண்டும். நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுக் கூட்டத்தில் நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் எதிரணியின் உறுப்பினர்கள் எவரும் பங்குபற்றுவதில்லை.

இதனால் நாட்டில் உள்ள அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடி ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. நாடாளுமன்றத்தைப் பலப்படுத்துவதாக ஜனாதிபதி கூறுகின்றார். ஆனால் இந்தியாவுடனான ஒப்பந்தம் குறித்து இதுவரை நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கவில்லை” – என்றார்.









# விழிப்புலனற்ற மாணவர்களுக்கு யாழில் வெள்ளைப் பிரம்புடன் நடைப் பயிற்சி






பாடசாலை மற்றும் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்கும் விழிப்புல னற்ற மாணவர்களுக்கு வெள்ளைப் பிரம்புடன் நடப்பதற்கு பயிற்சி வழங்கும் விழிப்பணர்வு நிகழ்வு யாழில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத் தில் பிரதேச செயலர் எஸ். சுதர்ஷன் தலைமையில் இதன் ஆரம்ப நிகழ்வு இன்று புதன்கிழமை காலையில் நடை பெற்றது.

யாழிலுள்ள பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வெள்ளை பிரம்புடன் நடப்பதற்கு பயிற்சி வழங்குதலும் பொதுமக்களுக் கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக விழிப்புணர்வு செயற்திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலரினால் வெள்ளை பிரம்புகள், சீருடைகள் வழங்கி ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ்விழிப்புணர்வு நடவ டிக்கை தொடர்ந்து பொது இடங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதேச செயலர் உள்ளிட்ட உத்தியோகஸ்தர்கள் விழிப் புலனற்றோர் சங்க அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் விழிப்புலனற்ற மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. வெல்லாவெளியில் கசிப்பு உற்பத்தி செய்த 4 பேர் கைது!

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவில் கசிப்பு உற்பத்தியை இல்லாதொழிக்கும் பொலிஸாரின் விசேட நடவடிக்கையில் இரு தினங் களில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மற்றும் கசிப்பு கடத்தி சென்ற 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை நேற்றுக் கைது செய் துள்ளதுடன் 200 லீற்றர் கோடா, 50 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்தி உபகரணங்களை மீட்டுள்ளனர் என்று வெல்லாவெளி பொலிஸார் தெரிவித் தனர்.

பொலிசாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றை அடுத்து பொலிஸ் பொறுப்பதிகாரி சப் இன்பெஸ்டர் எம். எம்.ஜெசூலி தலைமையிலான பொலிஸ் குழுவினர் திக்கோடை பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை முற்றுகையிட்டு 2 பேரைக் கைது செய் தனர்.

அடுத்து நெல்லிக்காட்டு பிரதேசத் தில் வீடு ஒன்றில் இருந்து இரு மோட் டர் சைக்கிள்களில் கசிப்பு உற்பத் திக்கு கலன்களில் 140 லீற்றர் கோடாவை கடத்திச் சென்ற இருவரைக் கைது செய்துள்ளனர். மேலும் இருவர் தப்பிச் சென்றுள்ளனர் என்று பெலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வேவை நலன் பாராட்டு




அம்பாறை மாவட்ட செயலக பிர தம பொறியியலாளராக பதவியுயர்வு பெற்றுச்செல்லும் கல்முனை கல்வி மாவட்ட பொறியியலாளர் ஏ.எம். ஸாஹி ரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கல்முனை வலயக் கல்விப் பணிப் பாளர் எம்.எஸ். சஹதுல் நஜீம் தலை மையில் செவ்வாய்க்கிழமை நடை பெற்றது.

இந்நிகழ்வில் வலயக் கல்விப் பணிப் பாளர் எம்.எஸ்.சஹதுல் நஜீம் தலைமை உரையையும், சேவை நலன் உரையை நிகழ்த்தினார். கணக்காளர் வை. ஹபீ புல்லாஹ், பிரதிக் கல்விப் பணிப்பாளர் களான பீ.ஜிஹானா ஆலிப், திட்டமிடல் பிரதிக்கல்விப்பணிப்பாளர் என். வர ணியா ஆகியோரால் சிறப்புரைகள் நிகழ்த்தப்பட்டன.



# அரசியலில் பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் வகையில் சீர்திருத்தங்கள்

## ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக.09

அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் வகையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை கணிசமான அளவில் அதிகரிப்பதற்கு நாம் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். அதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளளது.

கண்டி உயர் பெண்கள் பாடசாலை மாணவிகளுடன் சந்திப்பு என்று நடைபெற்றது. இந்த சந்திப்பில் சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று (08) ஜனாதிபதி அலுவலகத்தைப் பார்வையிட வருகை தந்த, கண்டி உயர் பெண்கள் பாடசாலை மாணவர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு ஒன்றையும் மேற்கொண்டனர்.

மாணவர் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கண்டி உயர் பெண்கள் பாடசாலையின் 100 இற்கும் மேற்பட்ட மாணவிகள் இலங்கைப் நாடாளுமன்றம், கொழும்பு துறைமுக நகரம், ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி அலுவலகம் ஆகியவற்றை பார்வையிடுவதற்காக வருகை தந்திருந்தனர். ஜனாதிபதி அலுவலகத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் ஜனாதிபதியுடனான சிநேகபூர்வ சந்திப்பிலும் கலந்துகொண்டனர்.

இதன்போது மாணவி ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தின் வரலாறு மற்றும் இலங்கையின் ஆட்சியில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும் இடமாக அதன் கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகள் குறித்து மாணவிகளுக்கு ஜனாதிபதி விளக்கமளித்தார்.

உயர்தரத்தில் கலைப்பிரிவு பாடங்களைக் கற்கும் மாணவர்களுக்கு விஞ்ஞானம், கணிதம் போன்ற ஏனைய பாடங்களையும் கற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென இதன்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். அதன் மூலம் 2048 அபிவிருத்தியடைந்த இலங்கையை நோக்கிய பயணத்துக்குத் தேவையான எதிர்கால சந்ததியை உருவாக்க முடியும் என்று தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களுக்காக ஜனாதிபதி அலுவலகத்தை திறந்து வைக்கும் வேலைத்திட்டத்தின் முதற்கட்டமாக கண்டி உயர் பெண்கள் பாடசாலை மாணவிகள் ஜனாதிபதி அலுவலகத்துக்கு வருகை தந்ததுடன், பல புதிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் அவர்களுக்குக் கிடைத்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர் திருமதி எம். அபேகுணசேகர மற்றும் ஆசிரியர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# முதலில் மணிப்பூர், பிறகு ஹரியானா நாட்டையே எரிக்க முயல்கிறீர்கள்!

## - மக்களவையில் ராகுல் காந்தி குமுறல்

மணிப்பூரை இந்தியாவின் பகுதியாக பிரதமர் நரேந்திர மோடி கருதவில்லை என்றும், மணிப்பூரில் இந்தியாவை பா.ஜ.க. கொன்றுவிட்டது என்றும் மக்களவையில் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

மணிப்பூர் விவகாரத்தில், மத்திய அரசுக்கு எதிராக மக்களவையில் எதிர்க்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கை இல்லா பிரேரணை மீதான 2 ஆவது நாள் விவாதம் இன்று நண்பகல் 12 மணிக்கு தொடங்கியது. காங்கிரஸ் நாடாளுமன்ற உடுப்பினர் ராகுல் காந்தி இதன்போது உரையாற்றினார் .

அவையில் அவரது பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக பா.ஜ.க. உறுப்பினர்கள் கோஷங்கள் எழுப்பினர். “சபாநாயகரே, முதலில் மீண்டும் என்னை மக்களவையில் இணைத்துக் கொண்டதற்கு நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்” என்று ஆரம்பித்த ராகுல் காந்தி தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்று நான் எனது மனதில் இருந்து பேச விரும்புகிறேன். நான் அரசின் மீது தாக்குதல் நடத்தப்போவதில்லை.



அதனால் நீங்கள் அமைதியாக இருங்கள். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலான எனது இந்திய ஒற்றுமை யாத்திரை இன்னும் முடியவில்லை. நான் யாத்திரை சென்றபோது என்ன நோக்கத்துக்காக யாத்திரை செல்கிறீர்கள் என்று என்னைக் கேட்டார்கள். நான் அன்பைச் செலுத்துவதற்குத் தான் இந்த நடைபயணத்தை மேற்கொண்டேன் என்று புரிந்துகொண்டேன். இதன் மூலம் நான், என் மனதில் இருந்து வெறுப்பை அகற்றிவிட்டு அன்பை நிறைத்து வைத்துள்ளேன். இந்த நடைபயணத்தின்போது இந்தியாவில் விவசாயிகள் நிலை மோசமாக இருப்பதை உணர்ந்தேன்.

நான் மணிப்பூர் சென்றேன். பிரதமர் ஒருமுறை கூட மணிப்பூர் செல்லவில்லை. பிரதமர் மோடிக்கு மணிப்பூர் மாநிலம் என்பது இந்தியாவின் பகுதியாக இல்லை. மணிப்பூரை இரண்டாக பிரித்து வைத்துள்ளார் பிரதமர் மோடி. நீங்கள் மணிப்பூரில் இந்தியாவைக் கொலை செய்துள்ளீர்கள். இந்தியா என்பது நமது மக்களின் குரல். நீங்கள் மணிப்பூரில் அந்தக் குரலைக் கொலை செய்துள்ளீர்கள். மணிப்பூரில் பாரத மாதாவை கொலை செய்திருக்கிறீர்கள். நீங்கள் மணிப்பூர் மக்களைக் கொலை செய்திருக்கிறீர்கள். நீங்கள் இந்தியாவைக் கொலை செய்திருக்கிறீர்கள். நீங்கள் துரோகிகள். தேச பக்தர்கள் அல்ல!

என் அம்மா இங்கே அமர்ந்திருக்கிறார். நீங்கள் என்னுடைய இன்னொரு அம்மாவை மணிப்பூரில் கொலை செய்தீர்கள். இந்திய ராணுவத்தால் ஒரே நாளில் மணிப்பூரில் அமைதியை கொண்டு வர முடியும். ஆனால், நீங்கள் அதைச் செய்யவில்லை. இந்தியாவின் குரலைக் கேட்க மோடி தயாராக இல்லை.- என்று ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

# நள்ளிரவில் நடிகர் ரஜினிகாந்த் வீட்டு கதவை தட்டிய பாடசாலை மாணவி!



நடிகர் ரஜினிகாந்த் வீட்டு கதவை நள்ளிரவு வேளையில் தட்டிய பாடசாலை மாணவி பொலிஸார் ஊடாக உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சென்னை போயஸ் தோட்டத்தில் உள்ள தமிழ் திரைப்பட நடிகர் ரஜினி காந்த் வீட்டுக்கு திங்கள்கிழமை நள்ளிரவு 15 வயது மதிக்கதக்க ஒரு சிறுமி சென்றுள்ளார். அவர் ரஜினிகாந்தின் வீட்டின் கதவை தட்டியதும், அங்கிருந்த காவலாளி வெளியே வந்துள்ளார். அவர், சிறுமியிடம் என்ன என்று விசாரித்துள்ளார். அப்போது அந்த சிறுமி சேலம் பெத்த நாயக்கம் பாளையம் சமுத்திரம் காலனியைச் சேரந்தவர் என்பதும், அந்தப் பகுதியில் உள்ள ஒரு பாடசாலையில் 10 ஆம் வகுப்பு படிப்பதும், ரஜினியை பார்க்க வேண்டும் என்ற ஆவலில் வீட்டில் பாடசாலைக்கு செல்வதாகக் கூறிவிட்டு சென்னைக்கு பேருந்தில் வந்திருந்தார் தெரிவித்துள்ளார்.

இதைக் கேட்ட காவலாளி, உடனே தேனாம்பேட்டை பொலிஸ் நிலையத்துக்கு தகவல் தெரிவித்துள்ளார். குறித்த மாணவியை பொலிஸார் மீட்டு அவரது பெற்றோரிடம் கைபேசி மூலம் பேச வைத்துள்ளனர்.

பின்னர், குறித்த சிறுமியை சென்னை அருகே பல்லாவரம் பம்மலில் வசிக்கும் அவரது பாட்டி வீட்டில் பொலிஸார் ஒப்படைத்துள்ளனர்.

# செந்தில் பாலாஜியிடம் 3 ஆவது நாளாகவும் விசாரணை!

அமைச்சர் செந்தில் பாலாஜியிடம் மூன்றாவது நாளாக அமலாக்கத் துறை அதிகாரிகள் விசாரணை நடத்தியுள்ளனர்.

உச்ச நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத் துறை தடுத்து வைத்து விசாரித்து வரும் நிலையில், மூன்றாவது நாளாக விசாரணை நடைபெற்றுள்ளது. அமலாக்கத் துறையைச் சேர்ந்த 3 அதிகாரிகள், செந்தில் பாலாஜியிடம் சுழற்சி முறையில் விசாரணை நடத்தவுள்ளனர்.

நேற்று முதல் செந்தில் பாலாஜியிடம் அமலாக்கத் துறை நடத்தி வரும் விசாரணையில், பல்வேறு கேள்விகளை முன்வைத்ததாக கூறப்படுகிறது. குறிப்பாக, கரூரில் 9 இடங்களில் நடந்த சோதனையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் குறித்து தனது எந்த விவரங்களும் தெரியாது என்று அமைச்சர் செந்தில் பாலாஜி பதிலளித்துள்ளார் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில், இன்றும் அமைச்சர் செந்தில் பாலாஜியிடம் ஒரு மணி நேரத்துக்கு ஒருவர் வீதம், 3 அதிகாரிகள் சுழற்சி முறையில் விசாரணை நடத்தியுள்ளனர் .



கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949